சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.7/2025.

இன்

அசல் வழக்கு எண்.101/2016

....

நாகராஜன் .. மனுதாரர்/வாதி

..எதிர்..

KN.கண்ணப்பசுப்பிரமணியன் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 04.11.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.சோமநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சி.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

## உத்தரவு

மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட Exhibit -A1 -ஐயும் அதேபோல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து மேற்படியாரால் ஒத்துக்கொள்ளப் பட்ட வக்காலத்து, சம்மன் மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை Compare செய்து Opinion வழங்குவதற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 தற்பொழுது திருத்தச் சட்டம் பிரிவு 39 BSA-ன்படி Expert Opinion-க்கு அனுப்ப அனுமதி அளிக்க உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 தற்பொழுது திருத்தச் சட்டம் பிரிவு 39 BSA-ன்படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 என்பது பிரதிவாதியால் தன் கைப்பட எழுதி கையெழுத்து செய்துள்ள கிரைய உடன்படிக்கை ஆகும். மேலும் மேற்படி வா.சா.1 பல தேதிகளில் கிரைய தொகை பகுதி பகுதியாக பெற்று கொண்டதற்கு Endorsement எழுதி அதிலும் எதிர்மனுதார்/ பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளார். எதிர்மனுதார்/பிரதிவாதியும் மனுதாரரை மோசடி செய்யும் வண்ணம் Exhibit A1-ஐ தான் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், அதில் உள்ள கையெழுத்துக்கள் எல்லாம் தன்னுடைய கையெழுத்து இல்லை என்று எதிர்வாதம் செய்து வருகிறார். மனுதாரர் தரப்பில் மேற்படியாரை குறுக்கு விசாரணை செய்ததில் மேற்படியார் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையெழுத்து இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட சம்மனை பெற்றுக் கொண்டதற்கான சம்மனில் உள்ள கையெழுத்து மேலும் மேற்படியார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்தையும் தன்னுடையது தான் என ஒத்துக் கொண்டுள்ளார். ஆனால் Exhibit A1-ஐ தன் கைப்பட எழுதவில்லை என்றும், அதிலுள்ள கையெழுத்துக்கள் தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் மறுக்கிறார். எனவே மனுதாரரும் தனது வழக்கறிஞர் மூலம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 73-ன்படி மேற்படியாரை தன் கைப்பட எழுத சொல்லி கையொப்பமிட்டு அதை வைத்து கையெழுத்து ஒப்புகை செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தில் ஒரு மனுவையும் தாக்கல் செய்து மேற்படி மனுவும் இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதார்/பிரதிவாதியை Re-call செய்து மீண்டும் Exhibit A1-ல் உள்ள கையெழுத்து தன் கையெழுத்து இல்லை என்றும் மறுத்துவிட்டார்.

மனுதாரர்/வாதியான தனது Crux of the case என்பது Exhibit A1-ஆன கிரைய உடன்படிக்கை தான். அதையும் எதிர்மனுதார்/பிரதிவாதி எழுதவில்லை என்றும், அதிலுள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது அல்ல என்று மறுதலித்தலால் Exhibit A1-ஐ எதிர்மனுதார்/பிரதிவாதி தான் எழுதி கையொப்பம் செய்துள்ளார் என்று நிரூபிக்க மனுதார்/வாதி கடமைப்பட்டுள்ளார். இந்நீதிமன்றத்தில் உள்ள 25.04.2019 கிரைய உடன்படிக்கையான Exhibit A1-ஐயும் மற்றும் நீதிமன்றத்திலுள்ள எதிர்மனுதார்/பிரதிவாதி தன் கையொப்பம் தான் என்றும் ஒத்துக் கொள்ள மேற்படியார் தரப்பில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து, சம்மன், எதிர்வழக்குரை

ஆகியவற்றை இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 Section 39 BSA-ன் படி Expert Opinion-க்கு அனுப்பி ஒப்புகை செய்து மேற்படியாரின் Opinion-ஐ பெற வேண்டியதாக உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்**

மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்கனவே நான்கு சாட்சிகளை விசாரித்துள்ளார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் வேண்டுமென்றே Reopen, Recall மற்றும் attested witness என்று மனு தாக்கல் செய்து, வேண்டுமென்றே காலதாமதம் செய்துவிட்டு, தற்சமயம் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், மீண்டும் காலதாமதம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் சாட்சிய சட்டம் பிரிவு 45ன் படி தற்போது பிரிவு 39 of BSA-ன் கீழ் மனு தாக்கல் செய்து, மீண்டும் வீண் காலதாமதம் செய்து வருகிறார். வாதிக்கு எதிர்மனுதாரர் எந்த விதமான கிரைய உடன்படிக்கையும் செய்து கொடுக்கவில்லை. மேற்படி (Exhibit A1) வெள்ளை பேப்பரை வைத்து வாதி கடந்த 10 ஆண்டுகள் வழக்கு நடத்திய நிலையில், இந்த மனுவும் அனுமதிக்கப்பட்டால், நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்து, அவர் மூலம் தான் கையெழுத்து நிபுணர் வசம் அனுப்பப்பட்டும், அதன் பின்னர் மேற்படி நிபுணர் அறிக்கை நீதிமன்றத்திற்கு வருவதற்கும் மேற்படி அறிக்கையை குறியீடு செய்ய மீண்டும் Reopen மற்றும் Recall மனு தாக்கல் செய்து, மேலும் மேற்படி அறிக்கை கொடுத்த கையெழுத்து நிபுணரை சாட்சிய சம்மன் மூலம் அழைத்து விசாரணை செய்ய பல ஆண்டுகள் ஆகிவிடும். எனவே வீண் விரக்தியில் தாக்கல் செய்துள்ள மனுதார் மனுவும் ஏற்புடையதல்ல. மேற்படி Exhibit A1 ஆவணத்தை ஒருமுறை எடுத்து பார்த்து, மேற்படி ஆவணம்

சட்டப்படி செல்லக்கூடிய ஆவணமா என்று பார்த்தாலே தெரியும். (இந்திய பதிவு சட்டம் 1908, பிரிவு 17ன் கீழ் 100 ரூபாய்க்கு மேல் உள்ள எந்த ஒரு ஆவணமும் கட்டாயம் பதிய வேண்டும் என்றும், மேற்படி பதிவு செய்யாத ஆவணத்தை நீதிமன்றத்தில் சாட்சியாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும் கூறுகிறது. தாவா (Exhibit A1) என்ற இரண்டு மூன்று வெள்ளை பேப்பரை வைத்து தாவா வழக்கை கடந்த 10 ஆண்டுகளாக நடத்தி வந்த நிலையில் உடல்நலம் பாதிக்கப் பட்ட எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிவு செய்யும் எண்ணத்துடன் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே தாவா மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

**6**. மனுதாரர் 25.04.1999-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். 25.04.1999-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையில் எதிர்மனுதாரர் கையெழுத்திடவில்லை என குறிப்பாக மறுத்துள்ளார். இந்நிலையில் 25.04.1999-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்தை எதிர்மனுதாரர் ஒத்துக்கொள்ளப்பட்ட வக்காலத்து, சம்மன், எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்களுடன் ஒப்பீடு செய்து பார்க்கும்போது உண்மை தன்மை வெளிவருவதற்கு வாய்ப்பு உள்ளது. இந்த மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் இருதரப்பினருக்கும் எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை. எனவே இந்த மனு அனுமதிக்கக்கூடியதாக உள்ளது.

முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரரின் ஒத்துக் கொள்ளப்பட்ட கையெழுத்தை 25.04.1999-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டி நீதிமன்ற ஆணையாளர் திருமதி.S.பிரியா MS.No.2482/2023 நியமனம் செய்யப்படுகிறார். அவருக்கான ஊதியம் ரூ.7,000/- அதை மனுதாரர் நீதிமன்ற ஆணையாளரிடம் நேரடியாக செலுத்தி வைக்கவும் நீதிமன்ற ஆணையாளர் மேற்படி ஆவணங்களை RFSL மதுரையில் ஒப்படைத்து அங்கு செலுத்தவேண்டிய ஆய்விற்கு உரிய கட்டணத்தை மனுதாரர் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. பரிசோதனைக்கு பின்பு RFSL மதுரை கொடுக்கும் அறிக்கையை அங்கிருந்து பெற்று நீதிமன்றத்தில் திரும்ப தாக்கல் செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 19.11.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:31:44 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.11.20 17:31:50 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court
Sivagangai

I.A.No.7/2025,
in
O.S.No.101/2016
in
**Draft/Fair/Order**
20.11.2025.